**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **Crl.M.P.No 1863 of 2025** |
| Deposition of witness | : | **PW1** |
| Name | : | **தேவராஜ்** |
| Father Name | : | **காளியண்ணன்** |
| Age | : | **36** |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07.01.2026.*

**முன் விசாரணை**

1. நான் தற்போது ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், வெள்ளாளபாளையம், முத்துக்காளிமடையில் வசித்து வருகிறேன். நான் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு எதிரி தனக்கு திருமணம் ஆகவில்லை என்று சொல்லி வீட்டில் உள்ள அனைவரையும் ஏமாற்றி எனது சகோதரியை திருமணம் செய்ய பொய்யான தகவல்களுடன் குடும்பத்தை ஏமாற்றி எனது சகோதரியை திருமணம் செய்தார். பின்னிட்டு எனது சகோதரியை சொல்லில் அடங்க முடியாத கொடுமைகளை செய்து மிகவும் காயங்களுடன் எதிரியின் வீட்டில் வாழ்ந்து வந்தார். எனது சகோதரியை எனது தந்தை உடல் நலம் விசாரிக்க செல்லும்போது, அவரை மறைத்து வைத்துக் கொண்டு குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் எனது சகோதரியை காண்பிக்காமல் மறைத்து வைத்தார். நான் அப்போது ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிறுவனாக இருந்தேன். எனது குடும்பம் எதிரியின் செயல்பாட்டால் மிகுந்த மன உளைச்சலுக்கும், குடும்ப இன்னல்களுக்கும் ஆளானோம். இதனால், நான் எனது பள்ளி படிப்பு அனைத்திலும் பாதிப்பு அடைந்தேன்.

2. எதிரிக்கு ஏற்கனவே திருமணம் நடந்தது ஒரு வருட காலம் கழித்து தான் எனது குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிய வந்தது. அவ்வாறு தெரிய வரும் பொழுது,

எதிரியை விசாரிக்கும் போது எதிரி பல பெண்களுடன் உல்லாச வாழ்க்கையும், ஊதாரித்தனமான செயல்பாட்டையும் செய்து வந்த விஷயம் அப்போது தான் தெரியவந்தது. இதனால் எனது குடும்பம் மகளின் வாழ்க்கை போய்விட்டது என மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானோம். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தினமும் கண்ணீர் விட்டு வருத்தப்பட்டார்கள். பின்பு, எதிரியின் மூலம் ஒரு ஆண் குழந்தை எனது சகோதரிக்கு பிறந்தது. அந்த குழந்தையையும், எனது சகோதரியையும் மிகவும் கொடுமை செய்து வீட்டுக்குள் வைத்து பூட்டிவிட்டு வெளியே செல்வார். அதனால் எனது சகோதரி எதிரி உடைய கொடுமைகளை தாங்க முடியாமல் உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

3. அப்போது எனது குடும்ப உறுப்பினர்கள், எனது சகோதரியை ஆறு மாத கைக்குழந்தையுடன் 22 ஆண்டுகளுக்கு முன்பாக எனது தந்தை பாதுகாப்பாக எங்களுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று எங்களுடைய பொறுப்பில் எனது சகோதரியையும் அவரது மகன் மயில்சாமியையும் கவனித்துக் கொண்டோம். 20 ஆண்டுகளாக அந்த குழந்தைக்கு அனைத்தையும் நாங்கள்தான் பார்த்து வந்தோம். எனது சகோதரியை எங்களது பொறுப்பில் 22 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் அழைத்துச் சென்றதிலிருந்து இதுவரையில் அவருக்கு தேவையான அனைத்து பாதுகாப்புகளையும் அடிப்படை தேவை மற்றும் செலவுகளையும் எங்களது பொறுப்பில் கவனித்துக் கொண்டோம்.

4. எனது தந்தை கடந்த ஓராண்டுக்கு முன்பாக இறந்து விட்டார். பின்பு நான் எனது சகோதரியை கவனித்து வந்துள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் மூன்று

பெண்கள். மொத்தம் நாங்கள் நான்கு பேர்கள் உள்ளோம். இந்த 22 ஆண்டுகளுக்கு மேலாக எனது சகோதரி மற்றும் மயில்சாமியும் எந்த விதத்திலும் யாரிடமும் கையேந்தாமல் அவர்களுடைய சமூக அந்தஸ்தை குறைவில்லாமல் கவனித்து வளர்த்து வந்துள்ளோம். எதிரி எந்த விதத்திலும் கடந்த 22 ஆண்டுகளாக எனது சகோதரியையோ அல்லது மகன் மயில்சாமியையோ நாடவில்லை. எதிரி 22 ஆண்டுகளாக எனது சகோதரிக்கோ அவரது மகனுக்கோ நில உதவியோ, பண உதவியோ, பொருள் உதவியோ செய்யவில்லை. எதிரி 22 ஆண்டுகளாக உல்லாச வாழ்க்கையும் பல பெண்களுடன் திருமணம் செய்து பல பெண்களுடன் குடும்பம் நடத்தி கொண்டுள்ளார்.

5. நாங்கள் தற்போது சமூக அந்தஸ்தில் நல்ல நிலைமையில் வாழ்ந்து வருகிறோம். நான் வழக்கறிஞராக உயர்நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிமன்றங்களிலும் பயிற்சி செய்து வருகிறேன். என்னுடைய அந்தஸ்து சமூகநிலை உடைத்து எறிய வேண்டும் என்று பல திட்டங்களை தீட்டி பல நபர்களின் உதவியுடன் செயல்பாடுகளை செய்து கொண்டுள்ளார். எங்களுடைய குடும்ப நிகழ்வு 23.12.2024-ம் தேதி அன்று நான் முன்னின்று நடத்திக் கொண்டிருந்தேன். அப்பொழுது எதிரி சம்பவ இடத்திற்கு வந்து எங்களை அவமானம் படுத்த வேண்டும் என்றும், கேவலப்படுத்த வேண்டும் என்றும் செயல்பாடுகளை செய்தார். அதன் மூலம் ஊரில் உள்ள அனைத்து நபர்களின் முன்னிலையில் நாங்கள் அவமானப்பட வேண்டும் என்றும் செயல்களை செய்தார். இதனால் நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானோம். ஆனாலும், எதிரியின் மீது நாங்கள் குடும்ப வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழோ அல்லது பராமரிப்பு தொகை

கேட்டோ எந்த வழக்கும் இதுவரையில் தாக்கல் செய்யவில்லை.

6. எதிரி ஏமாற்றுதல், கலவரம் செய்தல், கலவரத்தை தூண்டும் நோட்டத்துடன் செயல்படுதல், பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்துதல், பொது தொந்தரவு ஏற்படுத்துதல், பின் தொடருதல், அவமானப்படுத்துதல், ஏமாற்றுதல், மோசடி, பல பெண்களை திருமணம் செய்து கொள்ளுதல், திருமணத்தை மறைத்தல், கொடுமைப்படுத்துதல், பயமுறுத்துதல், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்பாடுகள் அனைத்தும் செய்துள்ளார். ஆனால் இது சம்பந்தமாக குன்னத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் காவல்துறை சார்பில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் உயர்நீதிமன்றம் சென்று மனு தாக்கல் செய்து அதில் தனிநபர் புகார் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டதால் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது தகுந்த விசாரணை செய்து, சம்பவ இடங்கள் மற்றும் சம்பவ நிகழ்வுகளை ஆய்வு செய்து எதிரியின் மீது வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.07 19:17:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.